*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 211/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW–1 (LW–1)***

*Name / Father's Name:* ***திரு.வெங்கட்ராமன் த/பெ. பெருமாள்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.07.2025.**

துவக்க நேரம் 01.10 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள அண்ணாநகரில் குடியிருந்து, விவசாய வேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள். எனது பக்கத்து காட்டுக்காரர் செல்வராணி என்பவருக்கு சொந்தமான விவசாய நிலத்தை சுமதி குத்தகைக்கு ஓட்டிவந்தார். மேலும் சுமதிக்கு சொந்தமாக விவசாய நிலமும் இருந்தது. அந்த நிலத்தில் குச்சிக்கிழங்கு பயிர் செய்திருந்தார்.

2) கடந்த 26.01.2023 அன்று பகல் 02.00 மணியளவில் சுமதி குச்சிக்கிழங்கை பிடுங்கிக்கொண்டு, வண்டியில் லோடு ஏற்றிக்கொண்டு குத்தகைக்கு ஓட்டிவந்த செல்வராணியின் நிலத்தின் வழியாக வாகனத்தை ஓட்டிவந்தார். அப்பொழுது நான் தோட்டத்தில் குச்சித்தவை ஒடைத்துக்கொண்டிருந்தேன். அப்பொழுது சத்தம் கேட்டது.

3) செல்வராணியிடம், முத்தையன் சண்டையிட்டுக்கொண்டிருந்தார். செல்வராணி, என்னை காப்பாற்று காப்பாற்று என்று கத்தினார். நான் பொட்டபுள்ளைக்கிட்ட என்ன பிரச்சனை என்று கேட்டேன். அதற்கு முத்தையன், என்னை குச்சியால் எனது முதுகில் அடித்து, கீழே என்னை தள்ளி ஒருமிதி மிதித்துவிட்டார்.

4) நானும், என்னை காப்பாற்றுங்கள் என்று கத்தினேன். எனது சத்தம் கேட்டு பக்கத்து காட்டுக்காரர்கள் எல்லாம் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். நான், எனது மகனுக்கு போன் செய்து, நடந்த சம்பவத்தை சொன்னேன். எனது மகன் முத்தையனின் அண்ணனிடம் இது குறித்து கேட்டபொழுது, முத்தையனும், ராமராஜனும், எனது மகனை அடித்தார்கள், பெருமாள், எனது மகனின் விரலை பிடித்து கடித்துவிட்டார்.

5) காயமுற்ற நாங்கள் இருவரும், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். நடந்த சம்பவத்தை குறித்து ஆத்தூர் அரசு மருத்துவமனையில் வைத்து, தம்மம்பட்டி காவல் நிலைய போலிசார், என்னிடம் விசாரணை செய்து புகார் வாக்குமூலம் பதிவு செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். **(புகார் வாக்குமூலம் அ.த.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.21 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.30 14:48:03 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 211/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-2 (LW-2)***

*Name / Father's Name:* ***திரு.பெரியசாமி த/பெ. வெங்கட்ராமன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.07.2025.**

துவக்க நேரம் 01.22 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள அண்ணாநகரில் குடியிருந்து, டிரைவராக வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெங்கட்ராமன், எனது தந்தை ஆவார். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) கடந்த 26.01.2023 அன்று செல்வராணியின் தோட்டத்தின் வழியாக சுமதி கிழங்கு ஏற்றிக்கொண்டு சென்றபொழுது, செல்வராணியின் தோட்டத்தின் வழியாக வரக்கூடாது என்று சொல்லி ராமராஜன் தடுத்துள்ளார். அந்த சமயத்தில் எதிரிகள், செல்வராணியை குச்சியால் அடித்து கீழே தள்ளிவிட்டார்கள். அப்பொழுது தடுக்க வந்த சுமதியையும், எதிரிகள் கீழே தள்ளியுள்ளார்கள். அந்த சத்தம் கேட்டு பக்கத்து காட்டில் இருந்த எனது அப்பா சென்று தடுத்தபொழுது எனது அப்பாவையும், எதிரிகள் பிடித்து அடித்துவிட்டார்கள்.

3) அதை பார்த்து தடுக்க சென்ற என்னை, அங்கிருந்த பெருமாள் எனது இடதுகை சுண்டுவிரலை பிடித்து கடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார். அதில் எனக்கு சிறிதளவு விரல் துண்டித்துவிட்டது. **(சாட்சி நீதிமன்றத்தில், தனது விரலை காண்பித்தார், சுண்டுவிரலில் சிறிதளது துண்டிக்கப்பட்டு காணப்படுகிறது).**

4) மேலும் முத்தையனும், பெருமாளும் குச்சியால், எனது மண்டையில் அடித்து காயத்தை ஏற்படுத்திவிட்டார்கள். நான் வலி தாங்கமுடியாமல் அய்யோ அம்மா என்று கத்தினேன். எனது சத்தம் கேட்டு பக்கத்து காட்டுக்காரர்கள் வந்தார்கள். அப்பொழுது எதிரிகள், எங்களை பார்த்து இன்னிக்கு தப்பிச்சிட்டிங்க என்னைக்கா இருந்தாலும் உங்க சாவு எங்க கையிலதான் என்று சொல்லி சென்றுவிட்டார்கள்.

5) காயமுற்ற நாங்கள் நான்குபேரும், ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். செல்வராணியும், சுமதியும் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.33 A.N

C UDAYASUNDARAM
Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.30 14:48:12 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 211/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-3 (LW-3)***

*Name / Father's Name:* ***திருமதி.சுமதி க/பெ. துரை***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.07.2025.**

துவக்க நேரம் 01.34 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள அண்ணாநகரில் குடியிருந்து, விவசாய கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெங்கட்ராமன், அ.சா.2 பெரியசாமி ஆகியோர், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள். ஆஜர் எதிரிகளை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) கடந்த 26.01.2023 அன்று எனது தோட்டத்தில் விவசாயம் செய்து கிழங்குபுடுங்கி லோடு ஏற்றிக்கொண்டு பகல் சுமார் 10.00-11.00 மணியளவில் சென்றுகொண்டிருந்தேன். அப்பொழுது அங்கு வந்த முத்தையன், ராமராஜ், பெருமாள் ஆகிய மூவரும் என் காட்டு வழியாக வண்டி ஓட்டிவரக்கூடாது என்று சொல்லி தடுத்தார்கள். மேற்படி நான் லோடு ஏற்றி சென்ற காடு எதிரிகளுக்கு சொந்தமான காடு இல்லை, ராமராஜனின் தங்கையான செல்வராணியின் நிலம் ஆகும். அந்த நிலத்தை செல்வராணிக்கு பணம் கொடுத்து நான் குத்தகைக்கு ஓட்டிவந்தேன்.

3) எதிரிகள் மூவரும், என்னை எப்படி நீ வண்டி ஓட்டி வரலாம் என்று மிகவும் அசிங்க அசிங்கமான வார்த்தையால் திட்டினார்கள். அப்பொழுது செல்வராணியும் அங்கு வந்து நான்தான் பணத்தை வாங்கிக்கிட்டு நிலத்தை

குத்தகைக்கு விட்டிருக்கேன், அவங்க என்காட்டு வழியாகத்தான் போவாங்க என்று சொன்னார். அதற்கு எதிரிகள் மூவரும் குச்சியால், செல்வராணியை அடித்தார்கள். அதை தடுக்க சென்ற என்னையும், எதிரிகள் குச்சியால் அடித்து கீழே தள்ளினார்கள். நான் கீழே விழுந்தவுன் கரோ முரோ என்று கத்தினேன்.

4) நான் கத்தும் சத்தம் கேட்டு அங்கு வந்த வெங்கட்ராமன் மற்றும் பெரியசாமியை எதிரிகள் அடித்துவிட்டார்கள். வெங்கட்ராமனுக்கும், பெரியசாமிக்கும் மண்டை உடைந்து ரத்தம் வந்தது. பெரியசாமியின் கைவிரலை பிடித்து கடித்து அவரது விரல் துண்டிக்கப்பட்டு கீழே விழுந்துவிட்டது.

5) காயமுற்ற நாங்கள் நான்குபேரும், ஆத்தூர் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு வந்து சேர்ந்தோம். செல்வராணியும், நானும் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டோம். போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.45 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.30 14:48:21 +0530

Judicial Magistrate No.2, Attur.

*Chapter XXII Code of Criminal Procedure.)*
*IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.II, ATTUR.*

*Case No.:* ***CC. 211/2023***

*Deposition of Witness for Prosecuting/Defence/Court* ***PW-4 (LW-5)***

*Name / Father's Name:* ***திருமதி.பாப்பாத்தி க/பெ. வெங்கட்ராமன்***

*Village/ Taluk:*

*Calling, Age:*

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the **11.07.2025.**

துவக்க நேரம் 01.46 A.N

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது உலிபுரத்தில் உள்ள அண்ணாநகரில் குடியிருந்து, கூலி வேலை செய்து வருகிறேன். அ.சா.1 வெங்கட்ராமன், எனது கணவர். அ.சா.2 பெரியசாமி, எனது மகன். அ.சா.3 சுமதி, ஆஜர் எதிரிகளை தெரியும், எனது பக்கத்து காட்டுக்காரர்கள் ஆவார்கள்.

2) கடந்த 26.01.2023 அன்று பகல் சுமார் 11.00-12.00 மணியளவில் எதிரிகள் செல்வராணியையும், சுமதியையும் அடிக்கும் சத்தம் கேட்டு, எனது கணவர் விலக்கிவிட சென்றார். எனது கணவரையும் எதிரிகள் அடித்து தலையில் காயம் ஏற்பட்டுவிட்டது. அதனை தடுக்க எனது மகன் பெரியசாமியையும், எதிரிகள் தலையில் அடித்து காயத்தை ஏற்படுத்தினார்கள். எதிரி பெருமாள், எனது மகனின் சுண்டுவிரலை பிடித்து கடித்து சுண்டுவிரல் சிறிதளவு துண்டாகிவிட்டது.

3) காயம்பட்ட இருவரையும், நான் ஆத்துார் அரசு மருத்துவமனைக்கு அழைத்துவந்து சிகிச்சைக்கு சேர்த்தேன். செல்வராணியும், சுமதியும் வெளிநோயாளியாக சிகிச்சை எடுத்துக்கொண்டார்கள். இரண்டு நாட்கள் கழித்து 28.02.2023 அன்று பகல் 12.00 மணியளவில் போலிசார் சம்பவயிடத்திற்கு வந்து

சண்டை நடந்த இடத்தை அடையாளம் காட்டச்சொல்லி கேட்டார்கள். நானும், சூரியாவும் அந்த இடத்தை அடையாளம் காட்டினோம். போலிசார் சம்பவயிடத்தை பார்த்து படம் வரைந்து எழுதிக்கொண்டார்கள். நானும், சூரியாவும் அதில் கையெழுத்து செய்தோம். என்னிடம் காட்டப்படும் பார்வை மகஜரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையதுதான். **(பார்வை மகஜர் அ.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** போலிசார், என்னிடம் நடந்த சம்பவம் குறித்து விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

எதிரிகள் ஆஜர். எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜரில்லை. வாய்ப்பளித்தும் குறுக்கு விசாரணை செய்யவில்லை.

முடிவு நேரம் 01.58 A.N

C UDAYASUNDARAM

Digitally signed by C UDAYASUNDARAM
Date: 2025.06.30 14:48:30 +0530

Judicial Magistrate No.2, Attur.